# மாதிரி கிராமம் என்ற போர்வையில் பாலையூற்றில் ஐம்பது சிங்கள குடும்பங்களை குடியேற்ற ஏற்பாடு

விலை ரூபா 4-00


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 32 கார்த்திகை 5 ஜ அவ்வல் பிறை 3 இதழ் 210

யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-11-1990


(யாழ்ப்பாணம்)

திருமலை நகருக்கருகாமையி லுள்ள பாலையூற்று என்னும் தனித்தமிழ் கிராமத்தில் சகல இனமக்களும் இணைந்துவாழ மாதிரிக்கிராமம் என்ற போர்வையில் ஐம்பதுசிங்களக்குடும்பங்கள் குடியேற்றப்படவிருக கிறார்கள் என்று அங்கிருந்து கிடைத்துள்ள தகவல்கள்தெரி விக்கின்றன.

சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் பணிப் புரையின் பேரில் மேற்படி மாதிரிக் கிராமம் பாலையூற் றில் அமைக்கப்படுகிறது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்குள்ளாக மேற்படி மாதிரிக்கிராமம் பூரணப் படுத்தப்படவிருக்கிறது.

பாலையூற்று கிராமத்தில் பௌத்த விகாரையும் அமைக் கப்படவிருக்கிறது. (153)

தமிழீழ ஊர்காவல்படை

## தாக்கியதில் நான்கு சிங்கள ஊர்காவல் படையினர் பலி!

(அம்பாறை)

மணலாறு (வெலி ஓயா) மாவட்டத்தில் உள்ள சூரிய ஹறு பகுதியில் சிங்கள ஊர் காவற்படைமீது, தமிழீழ ஊர்காவற்படையினர் மேற் கொண்ட தாக்குதலில் நாலு சிங்கள ஊர்காவற்படையினர் அதே இடத்தில் கொல்லப் பட்டனர்,

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் சூரியஹறு பகுதியில் ரோந்து சென்ற

[4-ம் பக்கம் பார்க்க]

## "மாவீரர்களை நான் கௌரவிக்கிறேன்"

- தலைவர் வே. பிரபாகரன்



(யாழ்ப்பாணம்)

"நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள். என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய தளபதி கள் நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போரா ளிகள் களத்தில் வீழ்ந்த போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவ தில்லை. இந்த இழப்புகள் எனது இலட்சியத்துக்கு மேலும் மேலும் உரமூட்டியிருக்கிறது. அதனால் இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கிறேன்" இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் மாவீ ரர் நாளையொட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள் ளார்,

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

"எமது வீர சுதந்திர வரலாறு, இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது. இவர்களது இறப்புக் கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளி களின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்து விட்டது. இம்மாவீரர்கள் காலத்தால்

(2ம் பக்கம் பார்க்க)

# 52 நாடுகளில் தமிழீழ மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படுகிறது!

(லண்டன்)

**தமிழீழ தேசிய தினமான மாவீரர் நாள் உலகில் 52 நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகிறது.**

**வீரமரணமடைந்த 2,300 க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் மாவீரர்க ளின் நினைவாக இந்நாடுகளிலுள்ள விடுதலைப்புலிகள் இயக்க ஆதரவாளர்களினாலும், தமிழ் மக்களினாலும் இதற்கான ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தநாள் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கலை நிகழ்ச்சிகள், போராளி கள் நினைவுரைகள், கண்காட் சிகள், எழுச்சி ஊர்வலங்கள் உட்பட பல நிகழ்ச்சிகள் மாவீரர் வாரத்தில் குறிக்கப் பட்ட நாடுகளில் நடைபெற வுள்ளது.

பத்திரிகைகள், மற்றும் பிர சுரங்கள் வாயிலாக இதற்கான அழைப்பிதழ்கள் இந்நாடுகளி லுள்ள தமிழர்களுக்கு ஏற்க னவே அனுப்பப்பட்டுள்ளது. (து)

முக்கிய இடங்களில்

## இன்று காலை தேசிய கொடி ஏற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு இன்று முதல் ஒரு வார காலத்திற்குத் தமிழ்ப் பிரதேசங்களில் 'மாவீரர் வாரம்' அனுஷ்டிக்கப்பட விருக்கிறது.

இன்று காலை ஆரம்பமாகும் 'மாவீரர் வாரத்தை' முன் னிட்டுக் காலை 9-00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றும் வைப வம் இடம்பெறும்.

கொடியேற்றத்துடன் வீர மரணம் அடைந்த போராளி களின் உருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டு, அந்தந் தப் பகுதி மக்களால் அஞ்சலி செலுத்தப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு ஊழியர் சைக்கிள் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கோட்டத்தில் இன்று மாவீ ரர் தினம் முதலாம் நாள் கூட்டுறவாளர்களினால்கொண் டாடப்படுகிறது.

மானிப்பாயிலிருந்து இன்று காலை 10 மணிக்கு கூட்டுறவுக்

(4-ம் பக்கம் பார்க்க)

## மாவீரரால் உலக தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கிறது

- விடுதலைப் புலிகள் ம. மு.

(யாழ்ப்பாணம்)

உலகெங்கும் அடிமையாக இருந்த தமிழர்கள் இன்றுசுதந் திர வாஞ்சை கொண்டு இப் போரில் தோள் கொடுக்க முன்வந்திருக்கின்றார்களென் றால் இந்த எழுச்சிக்கு வித் திட்டவர்கள் எமது மண்ணை யும் மக்களையும் நேசித்த மாவீரர்கள் இன்று இவர் களால் உலகத் தமிழினமே தலைநிமிர்ந்து நிற்கின்றது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயல கம் கூட்டுறவுமலருக்கு வழங்கி

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல்

(யாழ்ப்பாணம்)

''புலிகளின் குரல்'' வானொலி இன்று 21-ம் தேதி காலை 9-00 மணிக்கு ஆரம் பித்து வைக்கப்பட வுள்ளது. 'புலிகளின் குரல்' வானொலியை பண்பலை வரிசை 94 மீற்றரில் (எப்.எம்-94) கேட்கலாம்.

உரும்பராயில்

## போர் விமான தாக்குதல் வயோதிபரும் மனைவியும் பலி

### 8 வீடுகள் பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பல பகுதிகளில் நேற்று நடந்த போர் விமானத் தாக்குதலில் இருவர் பலியானார்கள். சிலர் காயமடைந்தனர். வீடுகள் கடைகள் சேதமடைந்தன.

மூன்று பொம்மர்கள்ஹெலி, கொப்டர் ஆகியன பரவலாக தாக்குதல்களை நடத்தின. இத்தாக்குதலில் நேற்றுக்காலை உரும்பராயில் வைரவர் கோவிலடி முருகன் வீதியைச் சேர்ந்த திரு. செ. சந்திர சேகரம் (67 வயது), அவரது 62 வயது மனைவி ஆகியோர் பலியானார்கள். உரும்பராய்

(4-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் பாடசாலை வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நேற்று் க் காலை பத்துமணியளவில்இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சி னால் பாடசாலை, வீடுகள், வர்த்தக நிலையங்கள் சேத மடைந்துள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

# தற்காலிக செய் முறைக் காட்டுநர்

மருத்துவபீடம்

மருத்துவபீடத்திலுள்ள Pre and Para Clinical துறைகளில் செய்முறைக் காட்டுநராக கடமையாற்றுவதற்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990-11-30ம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் விண்ணப்பதாரர்களை 1990-12-06ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சபை அறையில் நேர்முகப் பரீட்சைக்காக சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(எ-831)



UNIVERSITY OF JAFFNA
FACULTY OF AGRICULTURE,
KILINOCHCHI

Applications will be received by me from suitable candidates for the following post up to 1990-11-27.

TEMP. DEMONSTRATOR IN AGRICULTURAL CHEMISTRY
SALARY SCALE;

Temp. Demonstrator: 3,250/- p. m. (Fixed)

QUALIFICATIONS

TEMPORARY

DEMONSTRATOR

A graduate or person awaiting results of a Final/Degree Examination.

Applicants are requested to apply together with their Bio-datas.

Qualified applicants are aslo requested to present for an Interview scheduled to be held on 1990-11-28 at 10-00 a m, in the Board Room of this University.

REGISTRAR

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1990 - 11 - 21.

(A-880)


## அகதிகளுக்கு பருப்பு

(நாவற்குழி)

தென்மராட்சி நிவாரணக் கழகத்தினால் பராமரிக்கப்படும் அகதிகளுக்கு வழங்குவதற்காக சாவகச்சேரி வர்த்தக சங்கத்தினால் பருப்பு வழங்கப்பட்டுள்ளது. (108)

## மருத்துவ மாது இல்லை

(வடமராட்சி)

வல்வை இந்திராணி அரசினர் வைத்தியசாலையில் பிரசவ மருத்துவ மாது ஒருவரும் இல்லை. அத்தோடு அத்தியாவசிய மருந்துகளும் இல்லை.

மேற்படி காரணங்களால் நோயாளர்களும், பிரசவத் தாய்மார்களையும் பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பிவருவதாக மேற்படி வைத்தியசாலையின் முகாமையாளர் தெரிவிக்கின்றார். (51)

# யாழ். ஆஸ்பத்திரியில் வசதியீனங்கள் மத்தியிலும் ஊழியர் சிறந்த கடமை

(கொழும்புத்துறை)

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர வெளிநோயாளர்களுக்கும், வார்ட்டுகளில் தங்கிஇருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கும் திருப்திகரமாகச் செய்யமுடியாத நிலையில் பலத்த சிரமத்தின் மத்தியில் தங்கள் கடமைகளைச் செய்து வருவதாக வைத்தியசாலைப்பதில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை உட்பட ஏனைய கிராமிய மத்திய மருந்தகங்கள் அனைத்திலும் மக்களுக்கு அத்தியாவசிய தேவையான பனடோல், விற்றமின் ரபிளற், இன்டொசிற் மற்றும் ஊசி மருந்துவகைகள் இல்லாது கடந்த ஆறு மாதங்களாக மக்கள் பெரும் கஷ்டப்படுவதாகவும் தாம் மேலிடத்துடன் பல முறை கடித மூலமாகவும், நேரிலும் தொடர்புகொண்டும் இன்றுவரை பலனளிக்கவில்லை எனவும் பதில் பணிப்பாளர் கூறினார்.

டாக்டர் எஸ். சிவகுமாரன், பணிப்பாளர் டாக்டர் செல்வி புஸ்பா சண்முகம் ஆகியோர் கொண்ட குழுவினர் வைத்தியசாலைக் குறைபாடுகள் பற்றி நேரில் பேச்சுவார்த்தை நடாத்தக் கொழும்பு சென்றுள்ளனர்.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் பல வசதியீனங்கள் காரணமாக ஊழியர்கள் தங்கள் முழுமையான சேவைகளை நோயாளர்களுக்குச் செய்யமுடியாது பலத்த சிரமத்தின் மத்தியில் தமது கடமைகளைச் செய்து வருகின்றார்கள்.

## மாவீரர்நாள் நிகழ்ச்சிகள்

(நாவற்குழி)

மாவீரர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி மேற்கு (கைதடி) கூட்டுறவுச் சங்கத்தினால் கூட்டுறவாளர்களிடையே பேச்சுப்போட்டியும், குழுப் பாடல் போட்டியும் நடாத்தப்பட்டன. போட்டி முடிவுகள் வருமாறு,-

பேச்சுப்போட்டி:- அ. ஜெயகௌரி, தி. உதயலதா, பன்னீர்ச்செல்வம்,

குழுப்பாடல்: கைதடி வடக்குக் கிளை, நவபுரம் கிளை, தச்சந்தோப்புக் கிளை.

### வில்லிசை

(நாவற்குழி)

மாவீரர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரக் குழுவினர் ''அம்மா நான் போராடப் போறேன்.' என்னும் வில்லிசையை தென்மராட்சி எங்கும் நடாத்தவுள்ளார்கள். (107)

### சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், அராலி வீதி புதிய குடியிருப்பு சனசமூக நிலையம் இன்று 21-ம் திகதி காலை 10-30 மணியளவில் மாவீரர் சனசமூக நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டு திறப்பு விழா நடைபெறும்.

### மரம் நாட்டு விழா

(பண்டத்தரிப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள சகல இடங்களிலும் மரம் நாட்டு விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. சிற்றூர் அவைகள் சனசமூக நிலையங்கள் ஆகியவற்றினால் சகல வீதிகளிலும் மரக் கன்றுகள் நாட்டப்படவுள்ளன. இதற்கான கொங்கிறீட் அடைப்புக் கூடுகள் வீதியோரங்களில் கட்டப்பட்டுள்ளன.

### அலங்காரப் பந்தல்கள்

சங்கானை, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சுழிபுரம், மூளாய், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு காரைநகர் ஆகிய இடங்களின் முக்கிய சந்திகளில் பிரமாண்டமான அலங்காரப்பந்தல்கள் நிறுவப்பட்டுள்ளன. ப.நோ.கூ.சங்கங்கள், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியனவும் தனித்தனியாக அலங்காரப் பந்தல்களை அமைத்துள்ளன. வீதிகள், ஒழுங்கைகள் ஆகியன துப்புரவு செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் காணப்படுகின்றன. பாடசாலைகளிலும் மாவீரர்தின விழாவைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இராசி பலன்

21-11-1990

புதன்கிழமை

சதுர்த்தி மு. இ. 10-41 வரை, பூராடம் அதிகாலை 3-35 வரை. அமிர்தயோகம். சதுர்த்தி விரதம். இராகு காலம் பகல் 12-00 முதல் 1-40 வரை. நல்லநேரம் மாலை 4-40 முதல் 6-10 வரை.

மேடம்- கவனக் குறைவு, வாக்குக்கலகம், பணக்கவலை, குடும்பச்சச்சரவு.

இடபம்; சிறுவிபத்து, அசதி, தொழில் பாதிப்பு, உறவினர் தொல்லை.

மிதுனம்- தொழில் சிறப்பு, தாய்வழி உதவி, அந்நிய மோகம், பயணம்.

கடகம்- குடும்ப மகிழ்ச்சி, காரியசித்தி, தொழில்கஷ்டம் சகோதர உதவி.

சிங்கம்- பயணங்களால் துன்பம், அதிகாரிகள் தொல்லை, வீண்பழி, மறதி.

கன்னி- கடும் உழைப்பு. வாக்குவன்மை, பொதுப் பணி, அகால போசனம்.

துலாம்- எண்ணம்போல் வாழ்வு. செய்தொழில்லாபம், சுபகாரியம், ஆலயதரிசனம்,

விருச்சிகம்- தகராறு, அந்நியர் தொல்லை, தொழில் போட்டி, அலைச்சல்.

தனுசு- நல்லோர் சிநேகம், அறிஞர் பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி, புத்திரர் புகழ்.

மகரம்- தொழில் கஷ்டம், மனைவியால் துன்பம், பணக் கவலை, வைத்தியசெலவு,

கும்பம்- குடும்பத்தில் சுபகாரியம், சகோதரர் உதவி, மாமனுர் கவலை, புகழ்.

மீனம்- தொழில் பாதிப்பு, குடும்பக்கவலை, காரியதடை, தொழிலாளர் பிணக்கு.

ஜோஸ்யர்.

## தேயிலை உடல் நலத்துக்கு உகந்தது

(லண்டன்)

தேயிலை உடல்நலத்திற்கு உகந்ததாகவும், சில புற்று நோய்களையும், இருதநோய்களையும் குணப்படுத்தும் தன்மையைக் கொண்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் உணவு விவசாயக்கழகம் அறிவித்துள்ளது. இதுகால வரையும் தேனீர் உடல் நலத்திற்கு ஆபத்து விளைவிக்கும் தன்மைகள் இருப்பதாகக் கூறிவந்த ஆய்வாளர்கள் தமது புதிய ஆராய்ச்சி முடிவுகள் தேயிலையின் விசேட தன்மையை மேம்படுத்தியுள்ளன. (ச)

## ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவில் 60 நாள் சுருக்கிய பாடத் திட்டத்தின் பிரகாரம் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புகள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

சங்கீத, நடன ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பை யாழ்ப்பாண மாவட்ட சங்கீதக் கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆரம்பித்துவைத்தார்.

விஞ்ஞான ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பை விஞ்ஞானக்கல்வி அதிகாரி திரு. வி. சுந்தரலிங்கம் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். கணிதம், சுகாதாரம், சமூகவியல் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. (72)

## மாவீரர்களை நான் கௌரவிக்கிறேன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாகாத சிரஞ்சீவிகள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள் காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

''சிங்கள ஆயுதப் படைகளையும் உலகின் மிகப்பெரிய இந்தியப் படைகளையும் தனித்து நின்று போராடி எமது மாவீரர்கள் படைத்த மகத்தான சாதனைகள் இன்று உலக வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. நீண்டதும், கடினமானதும், அபாயகரமானதுமாக இந்த யுத்தங்களில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, துன்பங்களை எழுத்தில் விபரிக்க முடியாது. இரும்பையொத்த இலட்சிய உறுதியுடன், எதையும் தாங்கும் இதயத்துடன், சாவுக்கு அஞ்சா வீரத்துடன் எமது வீரர்கள் போராடினார்கள். போர்க்களத்தில் வீர மரணத்தைத் தழுவினார்கள்.

''இந்த மாவீரர்களுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும், வீரத்தையும், விடுதலைப்பற்றையும் எண்ணிப் பார்க்கும்போது எனது உள்ளம் பெருமை கொள்கின்றது.

இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகிறேன்.

உங்களது குழந்தைகள் தமது உயிர்களுக்கும் மேலாக தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமைகொள்ளவேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமாகிவிட்டார்கள்.

''எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும். எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்து எறியப்படவேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும். இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும். மரணத்தின் நிழலில் வாழத்தான்வேண்டும்.

''நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம். அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சி வளர்க்கின்றோம்; அந்த விதை வளர்ந்து, விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை ஒரு நாள் நினைவாக்கும்.'' (வி)

## விவசாயிகள் அச்சம்

(அக்கரைப்பற்று)

பொத்துவில் பகுதியில் இம்முறை விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்க விவசாயிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

இதனால் பெரும்பகுதி விவசாய நிலங்கள் தரிசாக உள்ளன. பாதுகாப்பு படையினர் இப்பகுதிகளிலுள்ள விவசாயிகளை பலவந்தமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வற்புறுத்திவருகின்றனர் (ச)

## விசர்நாய்க் கடிக்கு ஆடு, மாடு பலி

(பண்டத்தரிப்பு)

இளவாலை கோவிந்தபுரம் என்ற இடத்திலுள்ள வீடு ஒன்றில் விசர்நாய் கடித்ததினால் ஒரு மாடும், ஒரு ஆடும் இறந்துள்ளன.

விசர்நாய்க் கடியினால் இறக்கும் ஆடு, மாடுகளை இறைச்சிக் கடைக்கு விற்பதைத் தவிர்க்குமாறும், இந்த இறைச்சிகளை உண்பதால் ஆபத்தான விளைவுகள் ஏற்படலாமென்றும் பண்டத்தரிப்புப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. பொ. பேரின்பநாதன் தெரிவித்துள்ளார். (72)

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர்சங்க மக்கள்கடையில் கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசியப் பொருட்கள் பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

# தமிழீழவிடுதலைப்போராட்டம்வரலாற்று

# களஞ்சியமாகப் பரிணமித்துள்ளது

தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் உலகின் பல பாகங்களிலும் வாழும் தேசிய இனங்கள் தமது தியாகத்தைக் கருவூலமாகக் கொண்டு தேசிய விடுதலை இயக்கங்களை உருவாக்கித் தமது விடுதலைக்காகப் போராடி வருகின்றன. ஸ்பெயினில் பாஸ்க் இனமக்களும் ஈரானில் குர்திஸ் இனமக்களும் விடுதலை இயக்கங்களை ஆரம்பித்துப் போராடி வருகிறார்கள். கியூபா மக்கள் பிடல் காஸ்ரோ தலைமையில் கெரில்லாப் போராட்டத்திற்கு முதன்மைத் தானம் கொடுத்துப் போராடி ஒரு சோஸலிச நாட்டை உருவாக்கினார்கள். பாலஸ்தீன மக்களும் அயர்லாந்து மக்களும் முறையே பி. எல். ஓ., ஐ. ஆர். ஏ. போன்ற விடுதலை இயக்கங்களை உருவாக்கிப் போராடி வருகிறார்கள்.

தமது இயக்கங்களில் இணைந்து கொண்ட விடுதலைப் போராளிகளுக்குத் தியாக உணர்வை ஊட்டுமுகமாக இந்த இயக்கங்கள் ஏனைய விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பற்றியும் அவர்களது தியாகப் போராட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்து அவர்களது போராட்ட அணுகுமுறைகள் பற்றிய கல்விப் போதனையைத் தமது உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துரைத்து வருகிறார்கள். அத்தோடு விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் தமது போராட்ட அணுகுமுறைகள் அனுபவங்கள் பற்றி எழுதிய நூல்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள் இவர்களுக்கு பாடவிதானமாகவும் அமைந்து விடுகின்றன. தான்பரின், மைக்கல் கொலின்ஸ், ஓமார் முக்தார், ஜெனரல் கியாப், பிடல்காஸ்ரோ, ஹோச்சிமின், மாசேதுங், லெனின், சேகுவேரா போன்ற பெரும் தலைவர்களது உரைகள் கருத்துக்கள் இன்று உலகின் மூன்றில் இரண்டு பகுதி நாடுகளை ஆகர்ஷித்துள்ளன.

**உலக விடுதலைப் போராட்ட**

**வரலாற்றில் நிகழ்ந்த**

**சம்பவங்களை விட தியாகத்தின்**

**எல்லையைத் தொட்டுவிட்ட**

**சம்பவங்கள் பல தமிழீழ**

**விடுதலைப் போராட்ட வரலாற்றில்**

**நிகழ்ந்துள்ளன.**

இலங்கையிலும் தமிழ்த் தேசிய வாதத்தை கருப்பொருளாகக்கொண்டு போராளிகள் போராடலானார்கள். அவர்களும் வெளிநாட்டு விடுதலை இயக்கங்கள் பற்றிய நூல்களைப்படிக்கலானார்கள். அதே போல ஏனைய கட்புல செவிப்புலசாதனங்களான வானொலி திரைப்படம், வீடியோ படங்கள் மூலம் விடுதலை இயக்கங்கள் பற்றிய கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டனர். Wild geese, Operation Day Break, Killing field, Paton போன்ற யுத்தம் பற்றிய ஆங்கிலத் திரைப்படங்களும் கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற தமிழ்த் திரைப்படங்களும் இந்தவகையிலும் விடுதலைப் போராளிகளுக்கு போராட்ட உணர்வை வளர்க்க உதவின. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் இந்திய தேசிய இராணுவத்தின் தலைவன் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸை தனது ஆதர்ச தலைவனாகக்கொண்டு போராட்ட உணர்வுகளை வளர்த்துக்கொண்டதாக ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

**மணிமாறன்**

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத்சிங், உத்தம்சிங், ராஜகுரு, சுகதேவ், வாஞ்சிநாதன் போன்ற ஆயுதப்போராளிகளது வரலாறு ஈழப்போராட்ட வீரர்களுக்கு உந்து சக்தியாக அமைந்தது. 1956ம் ஆண்டு இடம்பெற்ற ஹர்த்தாலின்போது திருகோணமலையிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்தின் மீது பறந்த சிங்கக்கொடியை அறுத்து எறிந்துவிட்டு அக்கொடிபறந்த இடத்தில் துக்கத்தின் குறியீடாகக் கறுப்புக்கொடியைக் கட்ட முனைந்த திருமலை நடராசன் சிங்களப்படைகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது கொடி காத்த குமரனின் உயிர்த்தியாகம் இவனது உயிர் தியாகத்திற்கு ஈடாகக் கௌரவிக்கப்பட்டது.

ஆனால் இன்று உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்களைவிட தியாகத்தின் எல்லையைத் தொட்டுவிட்ட சம்பவங்கள் பலதமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. உலக விடுதலைப்போராட்டங்கள் மூலம் தமிழ்த்தேசிய இனம் கற்றுக்கொண்டபாடல்களை விட இன்றைய காலகட்டத்தில் தமது தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப்போராடும் இனங்கள்எல்லாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திலிருந்து படிக்க வேண்டியபாடல்கள் ஏராளம். குறிப்பாக ''சைனைட்'' என்ற சொல்லை உலகில் உச்சரிக்கும்போது அதனுடன் விடுதலைப்புலிகளின் பெயரை இணைத்துச் சொல்லுமளவிற்கு இன்று சைனைட் அரசியல் அகராதியில் ஒரு தனித்துவம் பெற்ற சொல்லாகிவிட்டது. காலிஸ்தான் கோரி போராடும் பஞ்சாப்பியர்களும் ஐரிஸ் விடுதலை போராளிகளும் இன்று சைனைட்டை தம்முடன் எடுத்துச் செல்கிறார்கள் பொட்டாசியம் சைனைட் இன்று ஒரு இரசாயனப்பொருள் என்பதை விட, போராளிகள் தம்மையும் தமது இயக்கத்தின் இராணுவ இரகசியங்களையும் பேணிக்காக்கும் கேடயமாகப் பயன்படுத்தப்படும் அளவுக்கு அரசியல் மையப்படுத்தப்பட்டு விட்டது. உலகிலேயே ஒரு விடுதலைப்போராட்ட வரலாற்றில் சைனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட போராளிகளது



சிவகுமாரன்

பெயர்ப்பட்டியலில் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கைக்கு நிகரான தொகையினரைக் கொண்ட போராளிகளின் எண்ணிக்கையை உலகில் எங்குமே காணமுடியாது. இது மட்டுமன்றி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த பல நிகழ்வுகள் ஏனைய விடுதலைப் போராட்டத்தில் நிகழாத சம்பவங்களாகவும் உள்ளன. தியாக வரலாற்றை தன்னகத்தே உள்வாங்கிக்கொண்ட ஒரு போராட்ட வரலாற்று களஞ்சியமாக தமிழீழ விடுதலைப்போராட்டம் இன்றுபரிணமித்துள்ளது. ஈழப்போராட்ட அரசியலில் ஸ்தாபன மயப்படுத்தப்படாத நிலையில் ஆயுதப்போராட்டத்தின் முன்னோடியாக சிவகுமாரன் விளங்குகிறான்.

(தொ - ரும்)

---

செய்தி ஏடுகள் குறிப்பு:

## இணையில்லா மாவீரர் சிறப்பு

புலிகளை அடக்குவதாக இந்தியா கணித்த கால எல்லை வரையறைகளை எல்லாம் விடுதலைப் புலிகள் தகர்த்தெறிந்திருக்கிறார்கள்.

'THE ISLAND'
(ஆசிரியர் தலையங்கம்)
13-03-1989

எல்லாம் சரியாகத் திட்டமிட்டு இந்தியப்படை ஒரு தாக்குதலுக்கு ஏற்பாடுசெய்த பின்பு விடுதலைப் புலிகளின் கெட்டித்தனமான உளவுத்துறை அதை எப்படியோ அறிந்து விடுகிறது. அந்தச்சேதி உள்ளூர் எல். ரி. ரி. ஈ. தளபதிக்குப் போய்ச்சேர்ந்து விடுகின்றது.

இந்தியப் படையின் போர்த்தந்திரக் குறைவும் அணுகுமுறைப் பிழையுமே இன்றுள்ள தோல்வி நிலைக்குக் காரணமாகும்.

'INDIA WEEK'
28 ஏப்ரல் - 4 மே
1989.

வவுனியா காடுகளில் அண்மையில் நடந்த பல சண்டைகளும், ஏனைய நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட மரணக் கிடங்குகளின் விளைவுகளும் அமெரிக்கப் படைகளுக்கு வியட்நாம் ஏற்படுத்திய அச்சத்தைவிடக் கூடிய அச்சத்தையே இந்திய அமைதிப்படைக்கு விளைத்துள்ளன.

எல். ரி. ரி. ஈ. கெரில்லாக்களால் இந்தியப்படை வீரர்கள் கொல்லப்படுவதாகவரும் செய்திகளும் இராணுவ மருத்துவ நிலையங்களுக்கு காயமடைந்த இந்திய படை வீரர்கள் அடிக்கடி கொண்டுவரப்படுவதும் இந்திய அரசுக்கு இக்களத்தில் ஏற்பட்டுள்ள வெற்றியை அல்ல இராணுவத் தோல்வியையே காட்டுகின்றது.

'SUNDAY'
2-5-1989

இந்திய அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ. எஸ் கல்கட் முல்லைத்தீவு நித்திகைக்குளம் காட்டுப்பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்துஇறங்கினார். அந்த இடத்தில் இந்தியப்படைக் காவலையும் மீறி விடுதலைப் புலிகள் தரையில் இருந்த இரு ஹெலிகொப்டர்களை சுட்டுநொறுக்கினார்கள் ஒன்று கல்கட் உடையது. பதுங்குகுழியில் ஓடி ஒளித்து கல்கட் உயிர் தப்பினார். புலிகள் தங்கள் வேலையை முடித்துவிட்டு எந்த உயிரிழப்புமின்றி அமைதியாகத் திரும்பினார்கள்.

'INDIA WEEK'
மே 26 - ஜூன் 1
1989

---

## நிகழ்ச்சிகள்

### கொடியேற்று வைபவம்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தில் மாவீரர் தினத்தன்று வீரமரணமடைந்த தேவனின் தந்தை திரு. த. சோமசுந்தரம் கொடியேற்றி வைபவங்களை ஆரம்பித்து வைப்பார்.

### அலங்கார வளைவுகள்

(பண்டத்தரிப்பு)

இளவாலை சிற்றூரவையினர் மாவீரர் தினத்தை முன்னிட்டுப் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர். வீதிகளுக்குப் போராளிகளின் பெயர்களைச் சூட்டுதல்' முக்கிய சந்திகளில் அலங்காரப் பந்தல்களை நிறுவுதல் போன்றவற்றை மேற்கொள்ளுவதற்கு இச்சிற்றூரவையினர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

### வீதிகள் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு சுழிபுரம் காட்டுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் இரு வீதிகளைச் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்துள்ளது. கல்லவேம்படியில் இருந்து காட்டுப்புலம் ஊடாகத் திருவடிநிலைக்குச் செல்லும் வீதியும், பாண்டுவெட்டைக்குச் செல்லும் வீதியுமே இவ்வாறு சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப்பட்டிருப்பதாகக் காட்டுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ஆச்சரியம் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (72)

---

## மாவீரர்களே!

மாவீரர்களே;
குயில்கள் கூடியழ
மயில்கள் மயங்கி நிற்க
புள்ளினங்கள்
புலம்பிவிழ
கள்ளுண்ணாது வண்டுகள்
கதறியழ
மரங்கள் தலைசாய்க்க
சிரங்கள் தாழ்ந்துவிட
எம்மக்கள் சூழ்ந்து
நிற்க
துப்பாக்கிகள் குனிந்து
நிற்க
விளைபூமி மண்ணதனில்
புதைத்துவிட்டோம்
உங்கள் புகழுடம்பை.
ஆயினும் உங்கள்
குனிந்த துப்பாக்கிகளை
நிமிர்த்துகின்றீர்
எங்கள்
கனவுகளை நனவாக்க.

- தயா

---

கடுகுக்கதை

## ஏமாற்றம்

''ஆமி வாறான்'' என்ற வதந்தியோடு வெளிக்கிட்டோடிய அந்தக் கிராமத்து மக்கள் ஒருவரொருவராக திரும்பிவந்து சேரத் தொடங்கினர்.

இராணுவமுகாமுக்கு அருகாமையில் தான் அந்தக் கிராமம் இருந்தது.

அருகில் இராணுவ முகாமிருந்த காரணம் வதந்திகூட உண்மையாகிப் பெரும் அனர்த்தங்களையே நடத்தி முடித்தது.

கிராமத்துச் சீதன வீட்டை பாஷனில்லை என்று விற்றுவிட்டுநகரத்தில்குடியேறியசெல்வந்தர் வைத்தியலிங்கமும் கோட்டை இராணுவத்தாக்குதலுக்குப் பயந்து அந்தக் கிராமத்து வீட்டில்தான் மூன்று நான்கு மாதங்களாக வந்து குடியிருந்துவந்தார்.

ஆமி வாறானென்ட வதந்தியோடை கிராமத்தை விட்டுப் போனவர் எல்லோருக்கும் கடைசியாகத் தான் வீடு வந்து சேர்ந்தார்.

வந்துசேர்ந்த சில நிமிடங்களுக்குள் வைத்தியலிங்கம் வீட்டில் கூக்குரல் பலமாகக் கேட்டது. மக்கள் கூட்டம் என்னவோ ஏதோ என்று பயந்தபடியே வந்து கூடிவிட்டது.

''ஐயோ, பொடியள் தங்கம் கேட்கையுக்கை இல்லை இல்லையென்று சொல்லி மறுத்தல்லே தாட்டனாங்கள்'' வைத்தியலிங்கத்தின் மனைவிஜானகி விழுந்து விழுந்து புரண்டு கதறி அழுதுகொண்டிருந்தாள்.

''வாழைமரத்தடியில் சிலையாக வைத்தியலிங்கம் ஒன்றரை இரண்டு வரும்'' என்றபடி இருந்தார்.

''ஆரோ அவர் தாட்டுவைத்த நகைகளையும் பணத்தையும் பிரட்டிக் கொண்டு போட்டாங்களாம்.''

வந்தவரில் ஒருவன் வந்து நின்ற புதியவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான்.

பொடியளை ஏமாற்றி விட்டமெண்டு தான் நினைச்சிருந்தன். இப்ப ஏமாந்தது நான்தான் என்று வைத்தியலிங் சொல்லாமல் சொல்லி நிறுத்தினார்.

- மாதவன்

யாழ். காணி பதிவகத்தில்—

# 1940ம் ஆண்டுக்கு முற்பட்ட பதிவேடுகள் முற்றாக சேதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். காணிப்பதிவகத்தில் 1940-ம் ஆண்டிற்கு முற்பட்ட சகல காணிப்பதிவேடுகளும் முற்றாக சேதமடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூறு ஆண்டுகளாகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இப்பதிவேடுகள் குடாநாட்டில் அண்மைக் காலத்திலேற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் பாதுகாப்பின்மையாலும் காணிப்பதிவகம் விமானத் தாக்குதல்களால் சேதமடைந்தமையினாலும் அழிந்து விட்டன என்று அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

1940-ம் ஆண்டிற்குப் பின்புள்ள காணிப்பதிவேடுகளும் அழியும் நிலையிலுள்ளன என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இக்காணிப்பதிவேடுகளைப் பாதுகாக்க முடியாத நிலையிலிருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (54)

## டிசம்பர் வரை அலவன்ஸ் வழங்கப்படும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண அரச ஊழியர்களுக்கு அபாய அலவன்ஸ் டிசம்பர் மாதம் 31ந் திகதி வரை வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த அலவன்ஸ், முன்னர் செப்டம்பர் 30ந் திகதி வரை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. (ச)

### உரும்பராயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு கமல் (வயது 10), பாக்கியரத்தினம் (வயது 66) ஆகியோர் உரும்பிராயில் காயமடைந்தார்கள். உரும்பராய்ப் பகுதியில் நடைபெற்ற பொம்மர் தாக்குதல்களினால் பத்து வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

கைதடி பகுதியில் பலத்த ஹெலித் தாக்குதல்கள் நடைபெற்றது. மற்றும் திருநெல்வேலி, நல்லூர் பகுதிகளிலும் நேற்று பிற்பகல் ஹெலி தாக்குதல்கள் நடைபெற்றது.

யாழ். நகரிலும் நேற்று மாலை மனோகரா தியேட்டா பக்கமாக ஷெல் தாக்குதல் நடைபெற்றது (153)

யாழ். குடாநாடு விழாக்கோலம்

## 1000 தெருமூடி பந்தல்; அலங்கார வளைவுகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி யாழ். குடாநாடு விழாக் கோலம் பூண்டுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப் பகுதிகளில் சுமார் 1000 தெருமூடிக் கொட்டகைகளும், நினைவு மண்டபங்களும் அலங்கார வளைவுகளும் பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரில் ஐம்பதுக்கு மேற்பட்ட அலங்கார வளைவுகள் முக்கிய சந்திகளில் அமைக்கப்பட்டுள்ளன.

பனம் பொருட்களிலிருந்து சில அலங்கார வளைவுகள் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. பனஓலை, பாய்களினாலும், பனமட்டைகளினாலும் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளது. மாவீரர் தினத்தையொட்டி சகல வீதிகள் ஒழுங்கைகள் எல்லாம் புதுப்பொலிவு பெற்றுள்ளன.

### மாவீரர் பெற்றோரை கௌரவித்தல்

மாவீரர் வாரமான ஏழு நாட்களும் நினைவுக் கூட்டங்களும், கவியரங்குகளும் பட்டிமன்றங்களும், கலை நிகழ்ச்சிகளும், மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவித்தல் போன்ற நிகழ்வுகளும், மரம்நாட்டுதல், சமூகசேவைகள் செய்தல், வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்களைச் சூட்டுவது போன்ற நிகழ்வுகள் இடம்பெறவிருக்கிறது. (153)

### கூட்டுறவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொடிகளை ஏந்திய மூவர் மரதன் ஓட்டமாக முன்செல்ல இவர்களைப் பின்தொடர்ந்து 9 பெண்களும் 15 ஆண்களும் சைக்கிளில் ஊர்வலமாகமானிப்பாய் ப.நோ.கூ. சங்கமுன்றலிலிருந்து புறப்பட்டு தாவடிச் சந்தி ஊடாக கோண்டாவில் சந்தி, திருநெல்வேலிச் சந்தி, கல்வியங்காடு, அரியாலை, கச்சேரி ஊடாக காங்கேசன்துறை வீதி வழியாக கூட்டுறவுக் கோட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறும் இடமான யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தை வந்தடையும். (153)

### சாவகச்சேரியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி யூனியன் பேக்கரியடியில் இடம்பெற்ற குண்டுவீச்சில் பாலசிங்கம், எஸ். கருணாகரன், விஞசித்தம்பி, சிவராஜா, பசுபதிப்பிள்ளை அமிர்தசிங்கம் ஆகியோரின் வீடுகளும், சிவா சைக்கிள் ஸ்ரோர்ஸ், குலசிங்கம் கடை ஆகிய வர்த்தக நிறுவனங்களும் நுணுவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயமும் சேதமடைந்துள்ளன.

சங்கத்தானை கோயிற்குடியிருப்பு பகுதியில் தனபாலசிங்கம், சின்னத்தம்பி, கோபால், ரட்ணம் ஆகியோரின் வீடுகளும் கச்சாய் வீதியில் ஜெயரூபன், தம்பிஐயா வேலாயுதபிள்ளை சின்னத்தம்பி ஆகியோரின் வீடுகளும் சேதமடைந்தன'

## கல்லடி முகாம் தாக்குதல் ஒருவர் பலி; பலர் காயம்

(மட்டுநகர்)

மட்டுநகரிலுள்ள கல்லடி பிரதான இராணுவ முகாம் மீது நேற்று முன்தினமிரவு 8 45 மணியளவில் விடுதலைப் புலிகள் 'காஸ்கஸ்ரோ' தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு இராணுவம் கொல்லப்பட்டதாகவும். பலர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதே தினத்தன்று ஆரையம்பதி இராணுவ முகாமிலிருந்து மண்முனைத்துறைக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 'கிளைமோர்' தாக்குதலில் நாலு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இராணுவத்தினரை மீட்பதற்காக வந்த இராணுவத்தினரை ஒல்லிக்குளத்தடியில் விடுதலைப்புலிகள் இடைமறித்து தாக்கியதில் மூன்று இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

இராணுவத்தினர் முகாமுக்குக் திரும்பிச் செல்லும் போது பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

மண்முனைத் துறையைப் பொதுமக்களின் பாவனைக்கும் அங்கு மீன் பிடிப்பதற்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தடை விதித்துவருவதால், நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர் குடும்பங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (வி)

### தமிழீழ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிங்கள ஊர்காவல் படையினர் மீது தமிழீழ ஊர்காவற் படையினர் முதல் தடவையாக மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் நாலு சிங்கள ஊர்காவற் படையினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். ஒருவர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இம் மோதலில் சிங்கள ஊர்காவற்படையினரிடமிருந்து பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டது. (வி)

### மாவீரரால்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யுள்ள சிறப்புச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் மேலும் கூறப்படுவதாவது:

370 வருடகால அடிமைச்சின்னமாக இருந்த கோட்டை மீட்கப்பட்டு தகர்க்கப்படுகிறது என்றால் இந்த மாவீரர்களின் வியத்தகு சாதனைகளும் தியாகங்களுமே!

இன்று உலகளாவிய ரீதியிலே, சிறந்த தலைமையைக் கொண்ட ஒரு வலிமைமிகுந்த இயக்கமாக எமது இயக்கம் கணிக்கப்பட்டுள்ளது என்றால் எமது தலைவரின் சரியான வழிநடத்தலும், எமது மாவீரர்களின் அளப்பரிய தியாகங்களுமேயாகும்.

ஒரு நாட்டிற்கு பெருமை, புகழ், கௌரவம் தேடித்தருபவர்களில் போராளி மிக முக்கிய இடத்தை வகிக்கின்றான். அவனின் தன்னலமற்றசேவை, கடமை உணர்வு, அர்ப்பணிப்பு, வீரம் ஒப்புவமையற்றது. இதனால் உலக வரலாறுகளில் இவர்கள் தனித்துவமான இடத்தினைப்பெறுகிறார்கள். அத்தகைய உன்னதமானதொரு இடத்தைப்பெறுகின்ற மாவீரர்களை நினைவுகூர்ந்து கௌரவிப்பது அந்த நாட்டில் வாழும்மக்களின் வரலாற்றுக் கடமையாகும்.

இந்தக் கடமையைச் செய்வதற்கு தமிழீழமக்கள் அனைவரும் முன்வரவேண்டுமென நாம் விடுத்த அழைப்பை ஏற்று முன்வந்த அனைத்துத் தமிழீழமக்களையும் நாம்நன்றியுணர்வுடன் பற்றிக்கொள்கிறோம். (153)

யாழ். மாவட்டத்தில்

# 5 ஆண்டுகளாக வாக்காளர் இடாப்பு திருத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1986ம் ஆண்டுக்குப் பின்னர் 5 ஆண்டுகளாக வாக்காளர் இடாப்புகள் திருத்திப் பதிவுசெய்யப் படாமல் உள்ளன.

இதனால் 18 வயது பூர்த்தியடைந்தவர்களும், புதிதாகக் குடியேறியவர்களும் வாக்காளர் இடாப்பில் இடம்பெற முடியவில்லை.

இறந்துபோன வாக்காளர்களின் பதிவுகளும் வாக்காளர் இடாப்பிலிருந்து அகற்றப்படவில்லை. (54)


யாழ். மாவட்ட கூட்டுறவாளர் பெருமையுடன் எடுக்கும் எழுச்சி விழா

## தமிழீழ மாவீரர் விழா!

இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி.
காலம்: 21-11-90 புதன்கிழமை
பகல் 1-00 மணி.

நிகழ்ச்சி நிரல்:

இறைவணக்கம்
வரவேற்புரை: திருமதி இ. லோகநாதன்.
தலைமையுரை: திரு. சு. சிவசுப்பிரமணியம்.

சிறப்புரை:

திரு. செங்கதிர் (பிரதி கட்சி அமைப்பாளர்- [illegible] விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி)
செல்வி மாலினி (யாழ். மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்)
திரு. சங்கீதன் (அரசியல் பொறுப்பாளர் வலிகாமம்)
திருவாளர்கள் கே. குமாரசாமி. பி. அன்ரனி, ஜி, அருள்மாஸ்டர்
கலை நிகழ்ச்சிகள் (யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள் வழங்கும்)
இயல், இசை, நாடகம்.
பரிசில் வழங்கல்

காலை 9-30 மணிக்கு கூட்டுறவுக் கொடியேற்றி வீதியுலா நடைபெறும்.

தமிழீழ மக்கள் அனைவரையும் விழாவில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கூட்டுறவுக்குழு
யாழ்ப்பாணக் கோட்டம்.

(ஏ 882)


### விசேட அபிசேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான நித்திய பூசைகளும், யாழ்ப்பாணம் கடைத்தெரு விநாயகர் ஆலய நித்திய பூசைகளும் இன்று முதல் தினமும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை இவ்விரு ஆலயங்களிலும் விசேட அபிசேகங்கள் இடம்பெறும். [ச]

சார்க் மாநாடு

### இன்று ஆரம்பம்

(மாலே)

'சார்க்' உச்சிமாநாடு இன்று மாலைதீவு தலைநகர் மாலேயில் ஆரம்பமாகிறது'

ஏழு நாட்டு தலைவர்கள் இம் மாநாட்டில் கலந்து கொள்வதையடுத்து மாலேயில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சி)


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Number B/100306/81.


### இலவச பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி தீவுப்பகுதி மினி பஸ்-வான் சேவையும் அராலித்துறை படகுச்சேவையும் இலவசமாக நடைபெறவிருக்கின்றன. இந்த இலவச சேவை நடைபெறும் தேதி அந்தந்தப் பகுதிகளில் அறிவிக்கப்படும்.

### முக்கிய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். குடாநாட்டிலுள்ள சகல வீதிகளும் சுத்தம் செய்யப்பட்டு, மரம் நாட்டும் வைபவமும் இடம்பெறும் அத்துடன் சில வீதிகளுக்கு வீரமரணம் அடைந்த போராளிகளின் பெயர்களும் சூட்டப்படும்.

பல்வேறு இடங்களில் கண்காட்சிகளும், இரத்ததானம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (153)

முதலாவது டெஸ்டில்

### மேற்கு இந்தியா தோல்வி

(கராச்சி)

பாகிஸ்தானுக்கும் மேற்கு இந்தியாவுக்கும் இடையில் கராச்சியில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

ஸ்கோர் விபரம்: மேற்கு இந்தியா-261, 181. பாகிஸ்தான்-345, 2-98. (வி)


விளம்பரம்

விற்பனைக்கு

சோதிட விலாச புத்தகசாலை. 46, பெரிய கடை: யாழ்ப்பாணம். வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் இயங்குகின்றது. சகல புத்தகங்களும், மற்றும் பாடசாலை உபகரணங்களும் பெற்றுக்கொள்ளலாம். 1991-ம் ஆண்டு இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கலண்டர் விற்பனையாகின்றது. (சி4150)